**சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டம் - 2020**

சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் 2017 நவம்பர் 30 இல் இடம்பெற்ற கலந்துரையாடல் குறிப்புக்களின் II ஆம் பின்னிணைப்பின் 12 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. மூன்றாம் நிலை வைத்தியசாலைகளில் உள்ள மருத்துவ வசதிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் தொற்றாத நோய்கள், குறிப்பாக இருதய நோய்களைக் (cardiovascular diseases) கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்கான மருத்துவ சேவையை மேம்படுத்தி அதன் மூலம் செயற்திட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கை மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,559 மில்லியனுக்கு சமமான ஜப்பான் யென் 11,352 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,519 மில்லியனுக்கு சமமான ஜப்பான் யென் 10,639 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,040 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஒக்தோபர் 20 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 ஒக்தோபர் 20 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2013 நவம்பர் 29 ஆம் திகதிய 230/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் பெறுதல் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ஜப்பானிய யென் 21.2 மில்லியனுக்குச் சமமான ரூபா 33.6 மில்லியன் தொகையான முன் இறுதிக் கட்டணம் (Front End Fee) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | முன் இறுதிக் கட்டணம் கடன்பெறுபவரால் (நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்) இலங்கையின் எதிரிணை நிதியம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் முன் இறுதிக் கட்டணம் மூலதனமாக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 262(2) | பணம் செலுத்தப்பட்ட அனைத்து உறுதிச்சீட்டுக்களும் அவற்றின் ஆதாரப்படுத்தும் ஆவணங்களும் ”செலுத்தப்பட்டது” என்ற முத்திரை மூலம் முத்திரையிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ரூபா 26.8 மில்லியன் தொகையான பதினேழு | கணக்காய்வு கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது டன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் கணக்குக் கிளையின் செயற்திட்டக் கணக்காளர் மற்றும் பதவியணியினர், பணம் செலுத்திய அனைத்து உறுதிச்சீட்டுக்களிலும், காசோலை எழுதும் நேரத்தில் அவ்வாறு பணம் | செலுத்தப்பட்ட அனைத்து உறுதிச்சீட்டுக்களும் அவற்றின் ஆதாரப்படுத்தும் ஆவணங்களும் ”செலுத்தப்பட்டது” முத்திரை மூலம் முத்திரையிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பணம் செலுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான இந்த செயற்திட்டத்தின் பணம் செலுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்களுடன் இணைக்கப்பட்ட ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் என்பன முத்திரையிடப்பட்டிருக்கவில்லை. | செலுத்திய உறுதிச்சீட்டுக்களுடனும் இணைக்கப்பட்டுள்ள ஆதாரப்படுத்தும் ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் “செலுத்தப்பட்டது” முத்திரையை பதிக்கும் குறித்த நிதிப்பிரமாணத்தை கண்டிப்பாக கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் வருடாந்த நிதித் தேவைப்பாட்டின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 அளவில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் தொகை ஜப்பானிய யென் 607 மில்லியனாக காணப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் உண்மையான பணவளிப்புக்களின் பிரகாரம் இது ஜப்பானிய யென் 92.7 மில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலம் பெறுகின்ற கடனின் செயன்முன்னேற்றம் 15.27 ஆன குறைவான சதவீதத்தில் காணப்பட்டது. | கடனின் உண்மையான அமுல்ப்படுத்தல் திகதி 2018 ஒக்தோபர் 19 ஆக காணப்பட்ட போதிலும் ஆலோசனை சேவையின் ஒப்பந்த உடன்படிக்கைக்காக சட்டப்பூர்வ அனுமதியை வழங்குவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஐந்து மாதங்கள் தாமதம் ஏற்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு இயன்றவாறு செயற்திட்டத்தின் கடனை வருடாந்த நிதி தேவைப்பாட்டிற்கு ஏற்ப பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட அமுல்ப்படுத்தல் அட்டவணையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் கண்டி, குருநாகல் மற்றும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் நிர்மாணங்களுக்கான ஒப்பந்ததாரர்களின் ஆலோசனை நடவடிக்கைகள் மற்றும் பதுளை மற்றும் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை, கண்டி, குருநாகல் மற்றும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலை மற்றும் கொழும்பு, களுத்துறை மற்றும் பேராதனை மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (MLT) பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் கொழும்பு உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு | செயற்திட்டத்தின் உண்மையான தாமதம் மொத்தம் ஒன்பது மாதங்கள் ஆகும், இது செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. | செயற்திட்ட அமுல்ப்படுத்தல் அட்டவணையின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகியவற்றில் உபகரணங்களை வழங்கி நிறுவுவதற்கான வழங்குநர்களை தெரிவு செய்தல் ஆகியவற்றில் 2022 ஏப்ரல் 30 அளவில் செயற்திட்டம் ஈடுபட்டிருந்தது. இதன் விளைவாக செயற்திட்ட நடவடிக்கைகள் சுமார் 2½ ஆண்டுகள் தாமதமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | பதுளை பொது வைத்தியசாலையின் புதிய இருதய சிகிச்சைப் பிரிவுக்காக 2022 ஆம் ஆண்டில் ஜப்பானிய யென் 687 மில்லியனிற்கு சமமான ரூபா 929 மில்லியன் பெறுமதியான உபகரணங்களை வழங்குவதற்கு இச் செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 2022 ஏப்ரல் 30 வரை அந்த இருதயநோய் பிரிவின் நிர்மாணம் பூர்த்தியடைந்திருக்காததால் திட்டமிட்டவாறு உபகரணங்களை வழங்கி நிறுவ இயலாதமையின் காரணமாக செயற்திட்டம் தாமதமடைவது அவதானிக்கப்பட்டது. | பதுளை மாகாண பொது வைத்தியசாலையில் குறித்த கட்டிடத்தின் நிர்மாணமானது JICA கடன் மூலம் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் நோக்கெல்லையினுள் காணப்படவில்லை. இது உள்ளூர் நிதி மூலம் நிதியளிக்கப்படுகிறது. தற்போது ஊவா மாகாணம் முழுவதற்கும் இருதய Catheterization வசதி காணப்படவில்லை. எனினும், 2022 மார்ச் மாத இறுதியில் உள்ளவாறு நிர்மாணத்தின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் முறையே 15 சதவீதம் மற்றும் 21.5 சதவீதம் ஆகும். | செயற்திட்டக் காலப்பகுதியினுள் செயற்திட்டத்தினால் இணங்கப்பட்ட உபகரணங்களை வழங்கி நிறுவுவதற்கு செயற்திட்டத்திற்கு இயலுமானவாறு பதுளை பொது வைத்தியசாலையின் புதிய இருதய நோய் சிகிச்சைப் பிரிவை பூர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |